21—1—1974 முதல் 25—1—1974 வரை ஆளுநர் உரையின்மீது விவாதம்.

26—1—1974 குடியரசு நாள்—விடுமுறை.

27—1—1974 விடுமுறை.

28—1—1974 ஆளுநர் உரையின் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை.

29—1—1974 அரசின் சட்ட முன்வடிவுகளும், தீர்மானங்களும்.

மேலவை வழக்கம்போல் பிற்பகல் 4 மணி முதல் 7 மணி வரை நடைபெறும்.

(2) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள், 1974 ஜனவரி 21-ஆம் நாள், திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு முன்னதாக செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும் என நான் மேலவை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

3. மாற்றுத் தலைவர் பட்டியல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 6வது விதியின் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை, மேலவையின் 47-வது கூட்டத் தொடருக்கு மாற்றுத் தலைவர்களாக நான் நியமித்துள்ளேன் :—

1. திரு. எம். இராமநாதன்.
2. திரு. எல். பலராமன்.
3. திரு. கே. எஸ். கணபதி.
4. திரு. எம். எம். பக்கர்.

4. ஆளுநர் உரையின் மீது விவாதம்.

திரு. எம். சங்கரலிங்கம்: மேலவைத் தலைவரவர்களே, " 1974 ஆம் ஆண்டு சனவரி 17 ஆம் நாள், ஆளுநர் அவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு உரை@ நிகழ்த்தியதற்காக தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றனர் " என்று முன் மொழிகிறேன்.

@ 95-104 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.